ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றுநிருப இல: PS/GPA/Circular/36/2020
2020 டிசெம்பர் 10 ஆம் திகதி

சகல அமைச்சுச் செயலாளர்கள்
அரசுக்குச் சொநந்தமான பொறுப்புமுயற்சிகள், கூட்டுத்துாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்கம் பெரும்பான்மையான பங்குகளைக் கொண்டிருக்கும் கம்பனிகள் உள்ளிட்ட அரசுக்குச் சொந்தமான கம்பனிகள்
அரசுக்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள்
மேற்குறிப்பிடப்பட்ட அமைப்புக்களின் சகல துணை நிறுவனங்கள்
ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோருக்கு,

**அரசுக்குச் சொந்தமான பொறுப்பு முயற்சிகள் (SOE) மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பர, சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புச் செலவினம்**

1. இது, விளம்பரப்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நலனுக்காக நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கு பொருத்தமான வழிகாட்டு நெறிகள் வெளியிடப்படும்வரை அரசுக்குச் சொந்தமான பொறுப்பு முயற்சிகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றை விளம்பரப்படுத்தல் செலவினங்களை இடைநிறுத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்ளும் எனது 2020 நொவம்பர் 18ஆம் திகதிய அறிவுறுத்தல் சுற்றுநிருபத்திற்கு மேலதிகமானதாகும்.

2. அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், அரசுக்குச் சொந்தமான வங்கிகள், லொத்தர்கள், காப்புறுதி, அபிவிருத்தி மற்றும் துணை நிறுவனங்கள் அடங்கலான அரச நிறுவனங்களின் விளம்பரப்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புச் செலவினம் மிக அதிகமாக உள்ளதென்பது அவதானிக்கப்பட்டுள்ளது. தனியார்துறை ஊடகங்கள், அதிலும் குறிப்பாக இலத்திரனியல் ஊடகங்கள் அரசுக்கச் சொந்தமான பொறுப்புமுயற்சிகளின் (SOE) அனுசரணையில் பெரிதும் தங்கியுள்ளமையினால், பெரும்பான்மை பங்குகளைக் கொண்டிருப்பவை அடங்கலான வர்த்தக ரீதியான அரசுக்கச் சொந்தமான பொறுப்புமுயற்சிகள் அரசாங்கத்தின் விருப்பிற்குரிய அபிவிருத்தி குறிக்கோள்களை அடையுமுகமாக தொடருறுதிமிக்க சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புச் செய்தியொன்றை முன்வைப்பதற்காக அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை வரைச்சட்டகத்திற்கமைவாக செயற்படுவது அவசியமாகும். சந்தை நற்பெயரை மேம்படுத்துவதற்கும் பாரிய அளவிலான நுகர்வோர் தளமொன்றையும் பொதுமக்களையும் சென்றடைவதற்கும் அத்தகைய செலவினம் அவசியமானதென்பதை அங்கீகரிக்கும் அதேவேளை, அத்தகைய செலவினங்கள் அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளையும் ஒட்டுமொத்த அரசாங்க வளத் தட்டுப்பாடுகளையும் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் அதேபோன்று முக்கியமானதாகும். எனவே, அத்தகைய செலவினங்கள் ஆக்கபூர்வமானவையாகவும், விளைவை மையமாகக் கொண்டவையாகவும் அமைவதோடு, இறுதியில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வர்த்தக ரீதியாகவும் சமூகரீதியாகவும் இலாபகரமான பயன்களைக் கொண்டுவருதலும் வேண்டும்.

3. குறித்த ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தினுள் காணப்படும் வருடாந்த செயற்றிட்டத்தில் தெளிவாக இனங்காணப்பட்டவாறு தமது சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்திப் பொருட்களின் வியாபாரக் குறியீடல் ஆகியவற்றின் மீது விளம்பரப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் சகல பொறுப்பு முயற்சிகளும் தேவையானவாறு ஈடுபட முடியும். எனினும், அத்தகைய செயற்பாடுகளின் முறைமையும் ஊடகமும் பின்பற்றப்படும் குறிக்கோள்கள் தொடர்பில்



ගාලු මුවදොර, කොළඹ 01 காலி முகத்திடல், கொழும்பு 01 Galle Face, Colombo 01
දුරකතන தொலைபேசி Telephones ++ 94 (0) 11 2354418 ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් தொலைநகல் Fax ++ 94 11 2446657
ඊ-තැපැල මින்-அஞ்சல் e-mail prsec@presidentsoffice.lk

அளவுக்கதிகமானவையாக இல்லாதிருப்பதை சகல பொறுப்புமுயற்சிகளும் எப்போதும் உறுதிப்படுத்த வேண்டும்.

4. இந்தப் பின்னணியில்தான் அனைத்து அரச நிறுவனங்களும் தமது விளம்பரப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் பினவரும் வழிகாட்டுநெறிகளைப் பின்பற்ற வேண்டுமென வேண்டப்படுகின்றன:

i. சகல விளம்பரப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட செலவினங்களும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் நிறுவன வியாபாரத் திட்டங்கள் ஆகியவற்றில் தெளிவாக பிரதிபலிக்கப்படுதல் வேண்டும்.

ii. அரசுக்குச் சொந்தமான சகல பொறுப்பு முயற்சிகளினதும் விளம்பரப்படுத்தல்/ஊக்குவிப்பு செலவினங்கள் அவ் விளம்பரப்படுத்தலின் நியாயம், குறிக்கோள்கள், செலவுகள் மற்றும் பெறுபேறுகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு உரிய செலவு பயன் பகுப்பாய்வின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு, சம்மந்தப்பட்ட செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படவும் வேண்டும். அதற்கமைய தயாரிக்கப்பட்டு வருடாந்த செயல்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த விளம்பரப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் திணைக்களத்திற்கு (PED) அதன் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

iii. அரசுக்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அடங்கலான அரசுக்குச் சொந்தமான பொறுப்பு முயற்சிகளின் (SOE) மொத்த விளம்பரப்படுத்தல்/ஊக்குவிப்பு செலவினங்கள் அதன் மொத்த வரவு செலவுத் திட்டத்திலுள்ள இயக்குதல் செலவின் 05% ஐ விஞ்சலாகாது. எனினும், தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகிவற்றின் விடயத்தில் இவ்வெல்லை முன்னைய ஆண்டின் மொத்த வருமானத்தின் 10 வீதத்தை விஞ்சலாகாது.

iv. அரசுக்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அடங்கலான அரசுக்குச் சொந்தமான பொறுப்பு முயற்சிகளினால் (SOE) விளம்பரப்படுத்தல்கள், அனுசரணை வழங்குதல், நன்கொடைகள் மற்றும் வெளியீடுகள் ஆகிய வடிவத்தில் மேற்கொள்ளப்படும் விளம்பரப்படுத்தல்/ஊக்குவிப்புச் செயற்பாடுகள் பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்காக மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும்:

அ. உள்நாட்டு உற்பத்திகள், சேவைகள், கலாசாரம் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை ஊக்குவித்தல்.

ஆ. தேசிய கொள்கை வரைச்சட்டகம் மற்றும் அரசாங்க வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றில் காணப்படும் அபிவிருத்திக் குறிக்கோள்களினுள் திட்டமிட்ட முன்னெடுப்புகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

இ. அதிகளவு உள்நாட்டு பெறுமதி சேர்த்தலோடு வியாபார வாய்ப்புக்களை ஊக்குவித்தல்.

ஈ. காலநிலை, சுகாதாரம், கல்வி மற்றும் சூழல் தொடர்பாக பொதுமக்களுக்கு தகவல்களைப் பரப்புதல்.

உ. மக்களுக்கு வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் மற்றும் வருமானம் ஆகியவற்றை மேம்படுத்தும் அதிகரித்த பொருளாதார செயற்பாடுகள்.

ஊ. சந்தையை ஆட்டிப்படைத்தலை இல்லாதொழித்து போட்டித் தன்மைமிக்க விலைகளையும் தரமான பொருட்கள் மற்றும் சேவைகளின் தங்கு தடையற்ற

வழங்கலையும் உறுதிப்படுத்துவதற்கான அதிகரித்த சந்தைப் போட்டித் தன்மை.

இச் செயற்பாடுகள் அனைத்தும் நிறுவனத்தை மையப்படுத்தியதாகவும் சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு பயன்மிக்கதாகவும் அமைதல் வேண்டும்.

v. சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் செயற்பாடுகள் புதிய வியாபார அபிவிருத்தி, நவீன பண்ணை விவசாயம், உயிர்ப் பல்வகைமை, திறன்கள், அபிவிருத்தி, உள்நாட்டு புத்தாக்கம், உயர் தொழில்நுட்ப வியாபாரம், இளைஞர், விளையாட்டு, மகளிர், தொழில் முயற்சியாளர்கள் ஆகியவற்றில் வெற்றிகரமான உள்நாட்டு வரலாற்றை மேம்படுத்துவதற்கு இயன்றவரை கூடிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

vi. சகல அரசுக்குச் சொந்தமான பொறுப்பு முயற்சிகளும் பின்வருவனவற்றிற்காக கௌரவ நிதியமைச்சரின் அனுமதியைப் பெற வேண்டும்:

அ. வருடாந்த விளம்பரப்படுத்தல் வரவுசெலவுத் திட்டத்தின் குறித்தரைக்கப்பட்ட எல்லையை விஞ்சுகின்ற ஏதேனும் ஊக்குவிப்புச் செயற்பாடு.

ஆ. வருடாந்த விளம்பரப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத ஏதேனும் திட்டமிடப்படாத ஊக்குவிப்புச் செயற்பாடு.

இ. ரூபா.100,000/- வை விஞ்சுகின்ற ஏதேனும் நன்கொடை.

ஈ. ரூபா. இரண்டு மில்லியனுக்குக் கூடிய ஏதேனும் அனுசரணை.

vii. அரச ஊடக நிறுவனங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் ரூபா. 5 மில்லியன் வரையிலான ஏதேனும் அனுசரணைக்கு மேலேயுள்ள vi (ஈ) யிலிருந்து விலக்களிக்கப்படும்.

viii. சகல அரசுக்குச் சொந்தமான பொறுப்பு முயற்சிகளும் (SOE) முதல் விருப்பத் தெரிவாக அரசுக்குச் சொந்தமான ஊடக நிறுவனத்தோடு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்பதோடு, பரஸ்பர பயன்களோடு விசேட ஏற்பாடொன்றைச் செய்துகொள்ளலாம்.

ix. சகல அரசுக்குச் சொந்தமான பொறுப்பு முயற்சிகளும் (SOE) ஊக்குவிப்புப் பெறுமதி என்ற வகையில் அத்தகையை செலவினங்களில் மிகச் சிறந்த பலன்களை வழங்கும் போட்டித்தன்மைமிக்க மாற்று வளங்களை ஈடுபடுத்த அனுமதிக்கப்படுகின்றன.

x. சகல அரசுக்குச் சொந்தமான பொறுப்பு முயற்சிகளும் (SOE) விளம்பர/ சந்தைப்பபடுத்தல் நிறுவனங்களைத் தெரிவு செய்வதில் மெய் நேர சந்தை தகவல் தரவரிசை நியமங்களையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை முறைமைகளையும் பயன்படுத்துமாறு ஊக்குவிக்கப்படுகினறன.

xi. அச்சு ஊடகங்களைத் தெரிவு செய்தலானது, தேசிய மற்றும் கலாசார விழுமியங்கள், விவசாயம், பாரம்பரியக் கைத்தொழில்கள், கிராமிய மைய பொருளாதாரச் செயற்பாடுகள், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க ஆவணங்கள், மாற்று அபிவிருத்திச் சிந்தனைகள் மற்றும் மும் மொழிகளிலும் சர்வதேச நிகழ்வுகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் பத்திரிகைகளுக்கு உரிய அங்கீகாரம் வழங்கவேண்டும்.

xii. அத்தகைய ஒப்பந்தங்கள் அனைத்தும் ஒப்பந்த சட்டத்திற்கு அமைவானவையாகவும் செயலாற்றுகையின் அடிப்படையிலானவையாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

xiii. சம்பந்தப்பட்ட ஒவ்வொரு சபையும் அத்தகைய சந்தைப்படுத்தல் ஒப்பந்தங்களின் செயலாற்றுகையை மீளாய்வு செய்வதோடு, பெறுபேறுகளை அடிக்கடி கண்காணிக்கவும் வேண்டும். திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர்கள் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிக்கப் பொறுப்பாகவிருப்பர்.

5. ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ், இலங்கைச் சுற்றுலாச் சபை, ஏற்றமதி அபிவிருத்திச் சபை, முதலீட்டுச் சபை மற்றும் இலங்கை தேயிலைச் சபை முதலிய அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் விளம்பர மற்றும் ஊக்குவிப்புச் செயற்பாடுகள் வெளிநாட்டுச் சந்தைகளை ஊக்கவிக்க வேண்டும். அத்தகையை ஊக்குவிப்புகள் குறைந்த பட்சம் 35 வீத உள்நாட்டு உள்ளடக்கத்தைக் (உற்பத்தி வேலை, இலங்கை தொழில்வாண்மையாளர்கள் மற்றும் கலைச்சேவைகள் ஆகியவற்றை ஈடுபடுத்தல் முதலியன) கொண்டிருப்பதை உறுதிசெய்ய வேண்டும் எனும் அதேவேளை, உள்நாட்டுச் சந்தைகளை இலக்ககாகக் கொண்டிருக்கும் வேறு நிறுவனங்கள் 100 வீத உள்நாட்டு உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கவேண்டும்.

6. நிறவனத்தின் சமூகப் பொறுப்பு (CSR) நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான அனைத்துச் செலவுகளும் ஊக்குவிப்புச் செலவினங்களாகக் கருதப்படுவதோடு, உரியமுறையில் திட்டமிடப்பட வேண்டும்.

7. தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிகள் (CEO) ஆகியோர் இச்சுற்று நிருபத்தினின்றும் ஏதேனும் விலகிச்செல்தலுக்கு அல்லது பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்கமைவான அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத் தெகையை விஞ்சிச் செல்தலுக்கு பொறுப்புக் கூறுபவர்களாக இருக்க வேண்டும்.

8. மேலே பந்தி 06 ற்கு அமைய ஏதேனும் விலகிச் செல்தலுக்கு கௌரவ அமைச்சரின் அனுமதி தேவை. கௌரவ நிதி அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக அனுமதி நடைமுறைக்கு இயைந்தொழுகும் வண்ணம் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO) அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் திணைக்களத்தின் (PED) பணிப்பாளர் நாயகத்திடம் முறையான வேண்டுகோள் ஒன்றினை விடுக்க வேண்டும்.

9. 2020 நொவம்பர் 18ஆம் திகதியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கமைய விளம்பரப்படுத்தல் செலவினத்தை இடைநிறுத்துதல் இச் சுற்றுநிருபத்தால் பிரதியீடு செய்யப்படுகிறது. அதற்கமைய, இச் சுற்றுநிருபத்திற்கு இயந்தொழுகுதலிலான தமது கடப்பாட்டிற்கு மதிப்பளிக்குமாறு அனைத்து நிறுவனங்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

10. இச் சுற்றுநிருபம் அதி மேதகு சனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் வெளியிடப்படுகிறது.

**ஒப்பம்.: . பி பீ ஜயசுந்தர**
சனாதியின் செயலாளர்

பிரதி: பணிப்பாளர் நாயகம், அரசாங்க பொறுப்புமுயற்சிகள் திணைக்களம்